


புதுகை
# வரலாறு நாளிதழ்
WWW.VARALARUU.COM VARALARUU PUDUGAIVARALARU VARALARUU 7502051351




வியாழன் ❖ நவம்பர். 17, 2022 | சென்னை & புதுக்கோட்டை | 4 பக்கம் ❖ வரலாறு 8 ❖ இதழ் 43 ❖ ரூ.10

## இந்தியாவிடம் ஜி-20 கூட்டமைப்பின் புதிய தலைமைப் பொறுப்பு

# ஒப்படைப்பு!

## உலகிற்கான முக்கிய முடிவுகளை எடுக்கும் அமைப்பாக உள்ளது
## சிங்கப்பூர், ஜெர்மன், இத்தாலி பிரதமர்களுடன் மோடி பேச்சுவார்த்தை



பாலி, நவ.17-

ஜி-20 கூட்டமைப்பின் உச்சி மாநாட்டில், அடுத்த தலைமைப் பொறுப்பு நேற்று (நவ.16ம் தேதி) முறைப்படி இந்தியா வசம் ஒப்படைக்கப்பட்டது. உலகிற்கான முக்கிய முடிவுகளை எடுக்கும் அமைப்பாக இது உள்ளது. இந்நிலையில், சிங்கப்பூர், ஜெர்மன், இத்தாலி பிரதமர்களுடன் இந்திய பிரதமர் மோடி தனித்தனியே பேச்சுவார்த்தை நடத்தினார்.

உலகின் வலிமையான சர்வதேச அமைப்புகளில் ஒன்றாக திகழ்கிறது ஜி-20 கூட்டமைப்பு. பொருளாதார ரீதியாக சக்திவாய்ந்த நாடுகளின் கூட்டமைப்பாக இது திகழ்கிறது. ஜி-20 கூட்டமைப்பில் உள்ள உறுப்பு நாடுகள் உலகின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 85 சதவீதத்தையும், உலக மக்கள் தொகையில் 3-ல் இரண்டு பங்கையும் கொண்டுள்ளன. அந்த வகையில் இது உலகிற்கான முக்கிய முடிவுகளை எடுக்கும் அமைப்பாக உள்ளது.

இந்தக்கூட்டமைப்பின் தலைமை, அதன் உறுப்பு நாடுகளுக்கு வழங்கப்படுகிறது. இந்தக் கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை கடந்த ஆண்டு ஏற்ற இந்தோனேஷியா, தற்போது தனது நாட்டின் பாலி தீவில் கூட்டமைப்பின் உச்சி மாநாட்டை நடத்தியது.

இதில், கூட்டமைப்பில் உள்ள உறுப்பு நாடுகளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். உச்சி மாநாட்டின் நிறைவு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது. இதில், இந்தோனேஷிய அதிபர் ஜோகோ விடோடோ, தலைமைப் பொறுப்பை ஒப்படைக்கும் நிகழ்வில் பங்கேற்று, பொறுப்பை பிரதமர் மோடி வசம் ஒப்படைத்தார்.

இதையடுத்து, ஜி-20 கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை இந்தியா ஏற்றது. இந்நிகழ்வில் உலகத் தலைவர்கள் பலரும் கலந்து கொண்டனர். எனினும், வரும் டிசம்பர் 1ம் தேதி தான் இந்தியா ஜி-20 கூட்டமைப்பின் தலைமைப் பொறுப்பை முறைப்படி ஏற்க இருக்கிறது.

முன்னதாக, இன்றைய நிகழ்ச்சியின் தொடக்கமாக பாலி தீவில் உள்ள சதுப்புநிலக்காட்டில் ஜி20 கூட்டமைப்பின் உறுப்பு நாடுகளின் தலைவர்கள் உச்சிமாநாட்டின் நினைவாக மரக்கன்றுகளை நட்டனர். அமெரிக்க அதிபர் ஜோ பைடன், இந்திய பிரதமர் நரேந்திர மோடி, இந்தோனேஷிய அதிபர் ஜோகோ விடோடோ, பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரன் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

இதையடுத்து, டிஜிட்டல் பரிமாற்றம் எனும் தலைப்பில் நடைபெற்ற அமர்வில் தலைவர்கள் பங்கேற்றனர். இதில், பேசிய பிரதமர் மோடி, பல புதுமையான தொழில்நுட்ப கண்டுபிடிப்புகள் உலகில் மிகப்பெரிய மாற்றத்தை நமது காலத்தில் ஏற்படுத்தி வருவதாகக் குறிப்பிட்டார்.

ஏழ்மை ஒழிப்புக்கான பல்வேறு உத்திகளில் தொழில்நுட்பம் மிகப்பெரிய சக்தியாக உருவெடுத்திருப்பதாகக் கூறிய நரேந்திர மோடி, பருவநிலை மாற்றம் உள்பட பல்வேறு உலக சவால்களுக்கு தொழில்நுட்பம் தீர்வு தர முடியும் என்றார்.

இதையடுத்து, சிங்கப்பூர் பிரதமர் லீ சீன் லூங், பிரான்ஸ் அதிபர் இம்மானுவேல் மேக்ரன், ஜெர்மன் பிரதமர் ஓலாஃப் ஸ்கால், இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி உள்ளிட்டோரை தனித்தனியே சந்தித்து பிரதமர் நரேந்திர மோடி பேச்சுவார்த்தை நடத்தினார்.

### திமுக ஆட்சியிலும் கொள்ளை

**அதிமுக ஆட்சியைப் போல் அரசு மதுபான கடைகளில் எம்ஆர்பியை விட கூடுதலாக 10 ரூபாய் வசூலிக்கப்படுகிறது**

**புதுக்கோட்டை மாவட்டத்தில் நாள் ஒன்றுக்கு 15 லட்ச ரூபாய் வீதம் மாதம் நான்கரை கோடி ரூபாய் கொள்ளை அடிக்கப்படுகிறது: வரலாறு**

## பழநி கோயிலுக்கு சொந்தமான பள்ளி, கல்லூரிகளில் காலை சிற்றுண்டி திட்டம்: முதல்வர் துவக்கி வைப்பு



சென்னை, நவ.17

திண்டுக்கல் மாவட்டம் பழநி தண்டாயுதபாணி கோயில் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வரும் 2 பள்ளிகள் மற்றும் 4 கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தினை தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலிக் காட்சி வாயிலாக நேற்று (நவ.16) தொடங்கி வைத்தார்.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: "தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று (நவ.16) முகாம் அலுவலகத்தில், இந்து சமய அறநிலையத்துறை சார்பில் பழநி, தண்டாயுதபாணி கோயில் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வரும் 2 பள்ளிகள் மற்றும் 4 கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியருக்கு காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தினை காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.

இந்து சமய அறநிலையத்துறையின் 2022-23ம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில், "திண்டுக்கல் மாவட்டம், பழநி, தண்டாயுதபாணி சுவாமி கோயில் சார்பாக நடத்தப்படும் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு கட்டணமில்லா காலை சிற்றுண்டி வழங்கப்படும்," என அறிவிக்கப்பட்டது. அதை தொடர்ந்து, பழநி, தண்டாயுதபாணி கோயில் நிர்வாகத்தின் கீழ் செயல்பட்டு வரும் பழநியாண்டவர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மற்றும் தண்டாயுதபாணி சுவாமி கோயில் தொடக்கப்பள்ளி ஆகிய 2 பள்ளிகள் மற்றும் பழநி, பழநியாண்டவர் கலை மற்றும் பண்பாட்டுக் கல்லூரி, பழநியாண்டவர் பாலிடெக்னிக் கல்லூரி, சின்னக்கலையம்புத்தூர், பழநியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி, ஒட்டன்சத்திரம், பழநியாண்டவர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகிய 4 கல்லூரிகளில் பயிலும் 4 ஆயிரம் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தினை தமிழக முதல்வர் தொடங்கி வைத்தார்.

இப்பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும் மாணவர்கள் தொலைவில் இருந்து கல்வி பயில வருகை தருவதாலும், அவர்களின் பொருளாதார நிலையை கருத்தில் கொண்டும் காலை சிற்றுண்டியாக ஒவ்வொரு நாளும் வெண்பொங்கல் மற்றும் இட்லி (அல்லது) ரவா உப்புமா மற்றும் இட்லி (அல்லது) கிச்சடி மற்றும் இட்லி ஆகியவற்றுடன் சட்னி, சாம்பார் சுழற்சி முறையில் வழங்கப்படும். இதற்கான செலவினம் கோயிலின் நிதியிலிருந்து செலவிடப்படும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## மின்னல் தாக்கி உயிரிழந்த 3 பேர் குடும்பத்திற்கு தலா ரூ.4 லட்சம்: அமைச்சர் ரகுபதி வழங்கல்



ஆவுடையார்கோவில், நவ.17

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுகா, பறையத்தூர் கிராமத்தில் கடந்த 14ம் தேதி அன்று மின்னல் தாக்கி உயிரிழந்த 3 நபர்களின் வாரிசுதாரர்களிடம், மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.4 லட்சம் வீதம் ரூ.12 லட்சம் மதிப்பிலான காசோலைகளை சட்டத்துறை அமைச்சர் ரகுபதி நேற்று வழங்கி ஆறுதல் கூறினார்.

பின்னர் அமைச்சர் ரகுபதி செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

பறையத்தூர் கிராமத்தைச் சேர்ந்த பழனிச்சாமி என்பவருடைய குழந்தைகள் 16 வயது மாணவன் தென்னரசு, 15 வயது மாணவி காளீஸ்வரி, பழனிச்சாமி சகோதரர் 38 வயது இளையராஜா ஆகியோர் கடந்த 14ம் தேதி மாலை பள்ளியிலிருந்து பறையத்தூர் கிராமத்திற்கு இருசக்கர வாகனத்தில் சென்ற போது மின்னல் தாக்கி உயிரிழந்தனர்.

இந்த துயர சம்பவத்தை அறிந்த முதல்வர் ஸ்டாலின் பாதிக்கப்பட்ட குடும்பத்தினருக்கு உடனடியாக அரசின் நிவாரண உதவிகளை வழங்க அறிவுறுத்தினார். அதன்படி, மாவட்ட நிர்வாகம் சார்பில், இறப்புச்சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் உள்ளிட்டவைகள் 24 மணி நேரத்திலேயே வழங்கப்பட்டது.

மேலும், மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து உயிரிழந்தவர்களுக்கு தலா ரூ.4 லட்சம் வீதம் ரூ.12 லட்சம் வழங்க வேண்டும் என முதல்வர் உத்தரவிட்டார். அதன் அடிப்படையில், உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களிடம் காசோலைகள் வழங்கி ஆறுதல் தெரிவிக்கப்பட்டது. இவ்வாறு அமைச்சர் ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்வில், மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, அறந்தாங்கி வருவாய் கோட்டாட்சியர் சொர்ணராஜ், ஆவுடையார்கோவில் ஒன்றியக் குழுத் தலைவர் உமாதேவி, ஆவுடையார்கோவில் வட்டாட்சியர் வில்லியம் மோசஸ் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## மனிதாபிமானம் இல்லாத அரசு பஸ் கண்டக்டர்! மாற்றுத்திறனாளி மாணவருக்கு நேர்ந்த கொடுமை




**புதுகை மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்குமா?**

அன்னவாசல், நவ.17

அன்னவாசல் அருகே இரண்டு கண்களும் தெரியாத மாற்றுத்திறனாளி கல்லூரி மாணவனை டிக்கெட் எடுக்கவில்லை என்றால் இறக்கிவிடுவேன் என கூறி டிக்கெட் எடுக்க வைத்த அரசு பஸ் நடத்துனரின் மனிதாபிமானமற்ற செயல் மாற்றுத்திறனாளிகளை இழிவுபடுத்துவதாக உள்ளது. இதற்கு புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

புதுக்கோட்டை மாவட்டம் அன்னவாசல் அருகே முக்கண்ணாமலைப்பட்டியை சேர்ந்தவர் முகமது ரபீக். இவரது மகன் முகமது பாசில் (20). இவருக்கு பிறவியிலேயே இரண்டு கண்களும் தெரியாது. இந்நிலையில் மாணவர் முகமது பாசில் புதுக்கோட்டை மன்னர் கல்லூரியில் பி.ஏ., 3ம் ஆண்டு படிக்கிறார்.

கண் பார்வை மாற்றுத்திறனாளி அடையாள அட்டை, இலவச பஸ் பாஸ் வைத்திருந்தவர் சில மாதங் களுக்கு முன் பஸ் பாஸ் காணாமல் போனது. புதிய பஸ் பாஸுக்கு விண்ணப்பித்தும் கிடைக்காத நிலையில் அடையாள அட்டையைப் பயன்படுத்தி பஸ் பயணம் செய்ய அதிகாரிகள் வலியுறுத்தினர். எனவே, மாற்றுத்திறனாளி அடையாள அட்டையைக் காண்பித்து கல்லூரிக்குச் சென்று வருகிறார்.

இந்நிலையில், நாள்தோறும் முக்கண்ணாமலைப்பட்டியில் இருந்து புதுக்கோட்டை கல்லூரிக்கு அரசு பஸ்ஸில் சென்று வருவது வழக்கம். நேற்று (நவ.16) காலை வழக்கம்போல் கல்லூரிக்குச் சென்றவர் மீண்டும் மதியம் 1.30 மணியளவில் புதுக்கோட்டையில் இருந்து அன்னவாசல் வழியாக மணப்பாறை சென்ற (டி.என்55.என்.0258 என்ற நம்பர் கொண்ட அரசு பஸ்ஸில் ஏறியுள்ளார்.

அதன் பின்னர் மாணவர் முகமது பாசில் பஸ் நடத்துனரிடம் அடையாள அட்டையை காண்பித்து காலாடிப்பட்டி சத்திரத்தில் இறங்க வேண்டும் என கூறியுள்ளார். அரசு பஸ் நடத்துனர் இதை ஏற்றுக்கொள்ள முடியாது. பஸ் பாஸ் வேண்டும். இல்லாவிட்டால் டிக்கெட் வாங்க வேண்டும். கீழே இறக்கி விடுவேன் என கறாராக கூறியுள்ளார் இதையடுத்து வேறு வழியில்லாமல் மாணவன் முகமது பாசில் பணம் கொடுத்து டிக்கெட் பெற்று காலாடிப்பட்டி சத்திரத்தில் இறங்கியுள்ளார்.

நடந்தவற்றை வீட்டுக்கு வந்து உறவினர்களிடம் தெரிவித்துள்ளார். அவர்கள் இதுகுறித்து மாவட்ட நிர்வாகத்திடம் புகார் கொடுப்பது என்று முடிவு செய்துள்ளனர்.

முன்னாள் முதல்வர் கருணாநிதி மாற்றுத்திறனாளிகள் துறை ஏற்படுத்தியதுடன் அவர்களுக்கான பல்வேறு வசதிகளை செய்து கொடுத்தார். இலவச பஸ் பாஸ், மாற்றுத்திறனாளிகளுக்கான உபகரணங்கள் என்று வழங்கி அவர்கள் வாழ்வில் ஒளி ஏற்படுத்தினார். தற்போதும் தி.மு.க., ஆட்சி தான் நடக்கிறது. அவரது மகன் மு.க.ஸ்டாலின் தான் முதல்வராக இருக்கிறார்.

தி.மு.க., ஆட்சியில் மாற்றுத்திறனாளிகளுக்கு பல்வேறு சிறப்புகள் செய்யப்பட்ட நிலையில் தற்போது மனிதாபிமானம் இல்லாத பஸ் கண்டக்டரால் அந்த துறைக்கே இழுக்கு ஏற்பட்டுள்ளது என்ற விமர்சனம் எழுந்துள்ளது. இதற்கு புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதே அனைத்து தரப்பினரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

## தேங்கி நிற்கும் மழை நீரில் கல்வி கற்கும் மாணவர்கள்: புதுக்கோட்டையில் அவலம்



புதுக்கோட்டை நகராட்சி போஸ் நகர் நடுநிலைப்பள்ளி வளாகம் தான் இது. இப்பள்ளியில் இப்பகுதியை சேர்ந்த 300க்கும் மேற்பட்ட மாணவ, மாணவியர் படித்து வருகின்றனர். தற்பொழுது பெய்து வரும் தொடர் மழையால் இப்பள்ளி வளாகம் இப்படி காட்சி அளிக்கின்றது. பள்ளி வளாகத்தில் பெய்யும் மழை நீர் வெளியேற வழி இல்லாததாலும் சமன்படுத்தப்பட்ட பகுதியாக இல்லாத ஒரு சூழலாலும் பள்ளிக்கு வரும் மாணவர்கள் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகி பரிதவித்து கல்வி கற்க வேண்டிய சூழல் ஏற்பட்டுள்ளது. நடவடிக்கை எடுக்க வேண்டிய நகராட்சியோ கடமைக்கு பணிகளை செய்துவிட்டு செல்வதாகவும் குற்றச்சாட்டு எழுகிறது. ஒவ்வொரு மழை காலத்திலும் பரிதவிக்கும் இப்பள்ளி மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு சுகாதாரத்தை பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது புதுகை வரலாறின் எதிர்பார்ப்பு ஆகும்.

# இன்று




## சிந்திப்போம்.... செயல்படுவோம்

நம்பிக்கை வெற்றியோடு வரும். ஆனால் வெற்றி நம்பிக்கை உள்ளோரிடம் மட்டுமே வரும்.






| தங்கம் | கிராம் | 22 கேரட் தங்கம் | 24 கேரட் தங்கம் |
|---|---|---|---|
| விலை | 1 கிராம் | Rs.4,970 | Rs.5,372 |

# தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கு உதவிகள் செய்ய தயார் மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் உறுதி!




புதுடெல்லி, நவ.17

தீப்பெட்டிக்கான ஜி.எஸ்.டி., வரியை 18 சதவிகிதத்தில் இருந்து 12 சதவிகிதமாக குறைத்ததற்காக மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு அகில இந்திய தீப்பெட்டி உற்பத்தியாளர்கள் சங்கம் சார்பில் நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி டெல்லியை அடுத்த சூரஜ்குந் பகுதியில் நடைபெற்றது.


இந்நிகழ்ச்சியில் பேசிய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் பேசியதாவது: பொதுவாழ்வில் இருக்கும்போது நமது சொந்த மண்ணுக்கு செய்யும் எந்த செயல்களுக்கும் நன்றி சொல்ல தேவையில்லை. அதுபோன்ற எண்ணத்தில் தற்போது வரையில் நான் செயல்பட்டதும் இல்லை. குறிப்பாக, தென் தமிழ்நாடு மழை இல்லை என்றால் கடும் வறட்சியான பகுதியாக இருக்கும்.

அங்குள்ள மக்களின் துயரங்களை நான் நன்றாக அறிவேன். அப்பகுதியில் உள்ள முன்னோர்கள் 150 ஆண்டுகளுக்கு முன்பே இதுபோல சிறுதொழிலை தொடங்கினார்கள். தம்மோடு தொழில் வாய்ப்புகள் முடிந்துவிடாமல் எதிர்கால தலைமுறைகளும் பயன்பெற வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்கள் கொல்கத்தா சென்று தீப்பெட்டி தொழில் பயிற்சி பெற்று தொலைநோக்கு பார்வையுடன் இதுபோன்ற தீப்பெட்டி தொழிற்சாலைகளை நிறுவி அந்த பகுதி மக்களின் வாழ்வில் முன்னேற்றம் அடைய வைத்துள்ளனர்.

அதன் விளைவாகவே இன்று நமது மண்ணில் பல தொழில்கள் வளர்ச்சி அடைந்துள்ளன. தீப்பெட்டி உற்பத்தியில் உலகளவில் அதிகமாக உற்பத்தி செய்வது சிவகாசிதான். தீப்பெட்டி ஏற்றுமதியில் 30 சதவீதம் சிவகாசியில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுவது பெருமைக்குரியது.

விவசாயம் செழிக்காத பூமியில் வறுமைக் கோட்டுக்கு கீழ் உள்ளவர்களுக்கும் வேலை வாய்ப்பு கொடுப்பது தீப்பெட்டி தொழிற்சாலைகள். விரைவில் தீப்பெட்டி உற்பத்தியாளர்களுக்கு தேவையான அனைத்து உதவிகளும் மத்திய அரசு தரப்பில் வழங்கப்படும். இவ்வாறு நிர்மலா சீதாராமன் உறுதியளித்து பேசினார்.

# தமிழகத்தில் நவ.20ம் தேதி கனமழைக்கு வாய்ப்பு இந்திய வானிலை ஆய்வு மையம் அறிவிப்பு



சென்னை, நவ.17

தமிழகத்தில் நவ.20ம் தேதி கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகம், புதுச்சேரியில் கடந்த மாதம் 20ம் தேதி வடகிழக்கு பருவமழை தொடங்கியது. அதன் பிறகு தொடர்ந்து மழை பெய்து வருகிறது. மேலும் வங்கக்கடலில் ஏற்பட்ட குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காரணமாகவும் தமிழகம் முழுவதும் பலத்த மழை பெய்தது.

இந்நிலையில், வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக வருகிற 19ம் தேதி வரை பெரும்பாலான இடங்களில் மிதமான மழை பெய்யும். தெற்கு வங்கக்கடல் பகுதியில் நேற்று புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி உருவானது. இது வருகிற 19ம் தேதி தமிழக கடலோர பகுதிகளை நெருங்க உள்ளது. இதனால் திருவள்ளூர் மாவட்டம் முதல் கன்னியாகுமரி மாவட்டம் வரை கடலோரம் மற்றும் அதன் உள் பகுதிகளில் 19ம் தேதி கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

இதன் எதிரொலியால் தமிழகத்தில் வரும் 20ம் தேதி கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. நேற்று உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறும். இவ்வாறு இந்திய வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.






# மிசோரம் கல்குவாரி விபத்தில் 11 தொழிலாளர்கள் பரிதாப பலி



மிசோரம், நவ.17

மிசோரமில் கல்குவாரியில் ஏற்பட்ட விபத்தில் இதுவரை 11 பேர் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன. மேலும் ஒருவரை தேடும் பணியில் தேசிய பேரிடர் மீட்பு படையினர் ஈடுபட்டுள்ளனர்.

மிசோரமில் நத்தியால் மாவட்டத்தில் மவ்தார் கிராமத்தில் தனியார் நிறுவனத்தின் கல்குவாரி ஒன்று இயங்கி வருகிறது. இந்த குவாரியில் தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டிருந்தபோது, திடீரென குவாரியில் கற்கள் அதிகளவில் சரிந்து விழுந்துள்ளன. இச்சம்பவத்தில் 12 தொழிலாளர்கள் சிக்கிக் கொண்டனர்.

தகவலறிந்து எல்லை பாதுகாப்பு படையினர் உடனடியாக அந்த பகுதிக்கு விரைந்து வந்தனர். அவர்களை தொடர்ந்து, தேசிய பேரிடர் மீட்பு படையினர் நேற்று முன் தினம் காலை அந்த பகுதிக்கு சென்று மீட்பு பணியை தொடங்கினர். இரண்டு அதிகாரிகள் மற்றும் பணியாளர்கள் அடங்கிய அந்த குழு விபத்தில் சிக்கி உயிரிழந்த 8 தொழிலாளர்களின் உடல்களை மீட்டனர்.

எனினும், மீதமுள்ள 4 தொழிலாளர்களை தேடும் பணியில் ஈடுபட்டனர். தொடர்ந்து நடந்த மீட்பு பணியில் மீதமுள்ள 3 பேரின் உடல்கள் நேற்று மீட்கப்பட்டன. மேலும், ஒருவரை தேடும் பணி நீடிப்பதாக கூடுதல் துணை ஆணையாளர் சாய்ஜிக்புய் தெரிவித்துள்ளார். இவ்விபத்து சம்பவம் மிசோரம் மாநில மக்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# மதுரை நகராட்சியில் குறைதீர்நாள் கூட்டம்



மதுரை, நவ.17

மதுரை மாநகராட்சி தெற்கு மண்டலத்தில் பொதுமக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் மேயர் இந்திராணி, மாநகராட்சி கமிஷனர் சிம்ரன்ஜித்சிங் காலோன் தலைமையில் நடந்தது.

துணை மேயர் நாகராஜன், மண்டல தலைவர் முகேஷ் சர்மா, உதவி ஆணையர் திருமலை, உதவி செயற்பொறியாளர் மயிலேறி நாதன், உதவி வருவாய் அலுவலர் சித்ரா, கண்காணிப்பாளர்கள் செந்தில்குமாரன். வீர பாலமுருகன் மற்றும் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் சொத்து வரி, பெயர் மாற்றம், புதிய வரிகள் வேண்டி 47 மனைகளும், பாதாள சாக்கடை சரி செய்தல், குடிநீர் குழாய் இணைப்பு, தெரு விளக்கு, சாலை வசதி ஏற்படுத்துதர வேண்டி ஏராளமானோர் புகார் மனுக்கள் அளித்தனர். மனுக்களை பெற்றுக்கொண்ட மேயர் இந்திராணி விரைவில் மனுக்கள் மீது தீர்வு காணப்படும் என்று தெரிவித்தார்.

# அரியலூர் மாவட்டத்தில் தேசிய மக்கள் நீதிமன்றம்



அரியலூர், நவ.17

தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு, உச்சநீதிமன்றம், உயர்நீதிமன்றம் மற்றும் தமிழ்நாடு மாநில சட்டப்பணிகள் ஆணைக்குழு வழிகாட்டுதலின்படி, அரியலூர் மாவட்டத்தில் இயங்கும் அனைத்து நீதிமன்றங்களிலும் நிலுவையில் உள்ள வழக்குகளை விரைந்து முடிக்க தேசிய மக்கள் நீதிமன்றம் நடந்தது.

தேசிய மக்கள் நீதிமன்றத்தை அரியலூர் முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு தலைவர் மகாலட்சுமி துவக்கி வைத்து தலைமை தாங்கினார். 2ம் அமர்வில் அமர்வு நீதிபதி கர்ணன் தலைமை தாங்கினார். 3ம் அமர்வில் குடும்ப நல நீதிபதி செல்வம் தலைமை தாங்கினார். அரியலூர் விரைவு மகளிர் நீதிமன்ற தலைவர் ஆனந்தன், அரியலூர் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் சரவணன், முதன்மை சார்பு நீதிபதி, நீதித்துறை நடுவர்கள் செந்தில்குமார், கற்பகவள்ளி ஆகியோர் அமர்வில் பங்கேற்றனர்.

ஜெயங்கொண்டத்தில் நடந்த மக்கள் நீதிமன்றத்தில் சார்பு நீதிபதி மற்றும் வட்ட சட்டப்பணிகள் குழு தலைவர் லதா, மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நீதிபதி கணேஷ் மற்றும் நீதித்துறை நடுவர் எண். 1 ராஜசேகரன் ஆகியோர் பங்கேற்றனர்.

செந்துறையில் நடந்த மக்கள் நீதிமன்றத்தில் மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்ற நீதிபதி அக்னேஷ் கிருபா மற்றும் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி செந்தில்குமார் ஆகியோர் பங்கேற்றனர். அரியலூர் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் நடந்த தேசிய மக்கள் நீதிமன்றத்தில் மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணைய தலைவர் ராமராஜ் மற்றும் உறுப்பினர் பாலு, ஆகியோர் பங்கேற்றனர்.

தேசிய மக்கள் நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞர்கள், வழக்கறிஞர்கள், காவல்துறையினர், அரசு அதிகாரிகள் மற்றும் நீதிமன்ற ஊழியர்கள் பங்கேற்றனர்.

# இலுப்பூர் அருகே 10 அடி மலைப்பாம்பு பிடிபட்டது



இலுப்பூர், நவ.17-

இலுப்பூர் அருகே வான்கோழியை விழுங்க முயன்ற 10 அடி நீள மலைப்பாம்பை மக்களே பிடித்து தீயணைப்புத் துறையினரிடம் ஒப்படைத்தனர்.

புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் அருகே உள்ள ஆலத்தூர் ஊராட்சி குறிச்சிப்பட்டி கிராமத்தில் ஜெயந்த் என்பவர்க்கு சொந்தமான வயல் தோட்டம் உள்ளது, இதில், அவர் மாடு, ஆடு, கோழி, வான்கோழி உள்ளிட்டவைகளை வளர்த்து வருகிறார். நேற்று காலை இவர் தோட்டத்திற்கு வந்த போது 10 அடி நீளம் கொண்ட மலைப்பாம்பு வான்கோழியை விழுங்க முயன்றது. இதில் வான்கோழி சப்தம் எழுப்பியது. உடனே அக்கம் பக்கத்தினருடன் இணைந்து தீயணைப்புத்துறை அதிகாரிகளுக்கு தகவல் தெரிவித்தனர்.

மலைப்பாம்பு அந்தத் தோட்டத்தில் இருந்த வான்கோழியை முழுமையாக விழுங்க முற்பட்டது. அப்போது அங்கிருந்த மக்கள் சாக்கு, கயிறு கொண்டு வந்து மலைப்பாம்பினை லாபகமாக பிடித்து கட்டிவைத்தனர். அதன் பின் பிடிக்கப்பட்ட மலைபாம்பை தீயணைப்பு துறையினரிடம் ஒப்படைத்தனர்.

# கந்தர்வகோட்டை குழந்தைகள் காப்பக தடை நீக்கம்: ஐகோர்ட் மதுரை கிளை உத்தரவு



**கந்தர்வகோட்டை, நவ.17**

கந்தர்வகோட்டையில் இயங்கி வந்த ஊரக வளர்ச்சி மையத்தின் குழந்தை காப்பக தடையை நீக்கி மதுரை உயர்நீதிமன்ற கிளை உத்தரவு பிறப்பித்தது.

புதுக்கோட்டை மாவட்டம் கந்தர்வகோட்டையில் புதுகை சாலையில் இயங்கி வந்த ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி மையம் என்ற குழந்தைகள் காப்பகம் இயங்கி வந்தது. இந்த நிர்வாகத்தில் முறைகேடுகள் நடப்பதாக கூறி கடந்த 2012ம் ஆண்டு டிசம்பரில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மூடி சீல் வைக்கப்பட்டது.

இதை எதிர்த்து குழந்தைகள் காப்பக நிர்வாகம் சார்பில், சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டு நடைபெற்று வந்தது. இவ்வழக்கின் தீர்ப்பு 2022 அக்டோபரில் வழங்கப்பட்டது. நிர்வாகத்தில் முறைகேடுகள் ஏதும் நடைபெறவில்லை என்றும், எடுத்துச்சென்ற அனைத்து ஆவணங்களையும் திருப்பி வழங்கவும், சீல் வைக்கப்பட்ட நிர்வாகத்தின் அலுவலகத்தை திறக்கவும் நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன்படி நேற்று புதுக்கோட்டை சமூக நலத்துறை அலுவலர்கள், கந்தர்வகோட்டை வட்டாட்சியர் மற்றும் வருவாய் துறையினர் மூடி சீல் வைக்கப்பட்ட அலுவலகத்தை திறந்து ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சிமைய நிர்வாகிகளிடம் ஒப்படைத்தனர்.

# ராக்கிங்கில் மாணவர்கள் ஈடுபட்டால் கடும் நடவடிக்கை: டி.ஜி.பி., எச்சரிக்கை



சென்னை, நவ.17

கல்வி நிறுவனங்களில் ராக்கிங்கில் ஈடுபடும் மாணவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என, தமிழக டி.ஜி.பி., சைலேந்திரபாபு காவல்துறை அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை அனுப்பியுள்ளார்.

வேலூரில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரியில் புதிதாக சேர்ந்த முதலாமாண்டு மாணவர்களை அரைகுறை உடையுடன் வளாகத்தில் ஓட வைத்து, அவர்கள் மீது தண்ணீரை பீய்ச்சி அடித்து ராக்கிங் செய்த காட்சி சமூக வலைதளங்களில் வைரலாக பரவியது. இச்சம்பவம் தொடர்பாக காவல்துறை விசாரணை நடத்தி வருகிறது.

இந்நிலையில், உச்ச நீதிமன்ற உத்தரவை மேற்கொள்காட்டி, தமிழக டி.ஜி.பி., சைலேந்திரபாபு அனைத்து மாவட்ட எஸ்.பி.,க்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார். அந்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

கல்லூரிகளில் மாணவர்கள் ராக்கிங் தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்கை தாமதிக்காமல் விரைவாக முடிக்க வேண்டும். ராக்கிங் கலாச்சாரத்தை முற்றிலுமாக ஒழிக்க, அது தொடர்பான புகார்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு டி.ஜி.பி., தெரிவித்துள்ளார்.

# சிறப்பு கால்நடை சுகாதார, விழிப்புணர்வு முகாம் சட்டத்துறை அமைச்சர் ரகுபதி துவக்கிவைப்பு



அரிமளம், நவ.17

புதுக்கோட்டை மாவட்டம், அரிமளம் ஊராட்சி ஒன்றியம், மேல்நிலைப்பட்டியில் சிறப்பு கால்நடை சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாமை சட்டத்துறை அமைச்சர் ரகுபதி நேற்று துவக்கி வைத்து, சிறப்பாக கால்நடைகள் வளர்ப்போர்களுக்கு ஊக்கப் பரிசுகள் மற்றும் தாது உப்பு கலவைகளை வழங்கி, கண்காட்சி அரங்கினை பார்வையிட்டார்.

பின்னர் அமைச்சர் ரகுபதி தெரிவித்ததாவது: கால்நடைகளின் நலன்காக்க 2022-23ம் ஆண்டு கால்நடைகள் சுகாதார மற்றும் விழிப்புணர்வு முகாம்களை ஒரு ஊராட்சி ஒன்றியத்திற்கு 20 முகாம்கள் வீதம் புதுக்கோட்டை மாவட்டத்தில் 13 ஊராட்சி ஒன்றியங்களில் 260 முகாம்கள் மார்ச் 2023ம் மாதத்திற்குள் நடத்தப்படவுள்ளது.

முகாமில் கால்நடைகளுக்கு கூடுதல் மருத்துவ வசதிகள், மேம்படுத்தப்பட்ட கூடுதல் கால்நடை இனப்பெருக்க முறைகள், கால்நடைகள் வளர்ப்போருக்கு சிறந்த கால்நடை பராமரிப்பு விழிப்புணர்வு முறைகள், செறிவூட்டப்பட்ட தீவன முறைகள் மற்றும் கால்நடைகளின் நலம் குறித்து கூடுதல் அறிவியல் தொழில்நுட்பங்களை செயல்படுத்தப்படுவதால் ஊரக ஏழை விவசாயிகளுக்கு மிகவும் பயனுள்ளதாக அமையும்.

முகாமில், கால்நடை பராமரிப்புத்துறை சம்பந்தமான கண்காட்சிகள் காட்சிப்படுத்தப்பட உள்ளதால், கால்நடை வளர்ப்பில் உண்டாகும் சந்தேகங்களுக்கு கால்நடை வல்லுநர்களிடம் அறிவுரைகள் பெற்று பயனடைலாம். சிறந்த கால்நடை வளர்ப்பு முறைகளைப் பின்பற்றும் சிறந்த 3 விவசாயிகளுக்கு விருதும், கிடேரி கன்று பேரணி நடத்தி சிறந்த 3 உரிமையாளர்களுக்கு பரிசு வழங்கப்படவுள்ளது. இவ்வாறு அமைச்சர் ரகுபதி தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் செல்வி, கால்நடைத்துறை மண்டல இணை இயக்குநர் மரு.சம்பத், வருவாய் கோட்டாட்சியர் முருகேசன், அரிமளம் ஒன்றியக் குழுத் தலைவர் மேகலாமுத்து, கால்நடைத்துறை உதவி இயக்குநர் ரவீந்திரன், வட்டாட்சியர் பிரவீணா மேரி, உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# விபத்தை தவிர்க்க சாலைகளில் வேகத்தடை: அரியலூர் ஆட்சியர்

அரியலூர், நவ.17

அரியலூர் மாவட்டத்தில் விபத்துக்கள் ஏற்படாமல் இருக்க சாலைகளில் வேகத்தடை அமைக்க சம்மந்தப்பட்ட அலுவலர்கள் நடவடிக்கை வேண்டும் என்று மாவட்ட ஆட்சித்தலைவர் ரமண சரஸ்வதி தெரிவித்தார்.

கிராமப்புற சாலைகளில் அடிக்கடி விபத்து ஏற்படும் இடங்களில் சாலைபாதுகாப்பு தொடர்பான வேகத்தடை அமைக்க வேண்டும். பொது மக்கள் அதிகம் கூடும் இடங்களான பள்ளி, கல்லூரி, மருத்துவமனை, காவல் நிலையம், அஞ்சல் நிலையம், வங்கி மற்றும் சந்தைப்பகுதிகளில் வாகனங்களினால் விபத்து ஏற்படுவதை தவிர்த்திட வேகத்தடை அமைக்க வேண்டும்.

வேகத்தடை அமைத்திட சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மக்கள் வாகனங்களில் செல்லும் போது விபத்துக்கள் ஏற்படாமல் இருக்க மிதமான வேகத்தில் செல்ல வேண்டும். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

# காஞ்சிபுரம் மாநகராட்சியில் புதிய நியாயவிலை கடை உத்திரமேரூர் எம்.எல்.ஏ., க.சுந்தர் திறந்து வைத்தார்



காஞ்சிபுரம் , நவ.17

காஞ்சிபுரம் மாநகராட்சிக்கு உட்பட்ட 48-வது வார்டு, கணேஷ் நகரில் அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும் விதமாக 48வது வார்டு மாமன்ற உறுப்பினர் கார்த்திக் ஏற்பாட்டின் பேரில், உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 15.78 லட்சம் மதிப்பீட்டில் 24 மணி நேர சிசிடிவி கண்காணிப்பு கேமராக்கள், தீயணைப்பு உபகரணங்கள், பூங்கா, மாற்றுத்திறனாளிகளுக்கு தனிவழி பாதை, மழைநீர் சேகரிப்பு, கழிப்பிட வசதி உள்ளிட்ட பல்வேறுவகையான அம்சங்களுடனும், புராதான சின்னங்கள் வரையப்பட்ட வண்ண வண்ண சுவர்கள், திருவள்ளுவரின் ஓவியம் வரையப்பட்ட முகப்பு சுவர் என காஞ்சிபுரம் மாவட்டத்தின் முன்மாதிரி நியாய விலை கடையாக திகழும் வகையில் கட்டப்பட்டது.'

இந்த நியாய விலை கடையை திமுக காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளரும், உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினருமான க.சுந்தர் சிறப்பு விருந்தினராக பங்கேற்று ரிப்பன் வெட்டி திறந்து வைத்தும் குத்து விளக்கு ஏற்றி பொதுமக்கள் பயன்பாட்டிற்காக துவக்கி வைத்து நியாய விலை பொருட்களை குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், காஞ்சிபுரம் மாநகராட்சி மேயர் மகாலட்சுமி யுவராஜ், துணை மேயர் குமரகுருநாதன், மாநகராட்சி ஆணையர் கண்ணன், திமுக தலைமை பொதுக்குழு உறுப்பினர் சீனிவாசன், மாநகராட்சி 3வது மண்டல குழு தலைவர் சாந்தி சீனிவாசன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள்,திமுககட்சியின் முக்கிய நிர்வாகிகளும் தொண்டர்களும் கலந்து கொண்டனர்.

# வடமதுரையில் மோட்டார் சைக்கிளில் இருந்து விழுந்து சென்னங்காரணி ஊராட்சி மன்ற வார்டு உறுப்பினர் பலி

ஊத்துக்கோட்டை, நவ17-

திருவள்ளூர் மாவட்டம், எல்லாபுரம் ஒன்றியம், சென்னங்காரணி ஊராட்சி மன்ற 6-வது வார்டு உறுப்பினர் அருண் பாண்டி(வயது24) ஆவார். இவர் வெங்கல் கிராமத்தில் உள்ள தனியார் நிறுவனத்தில் பணியாற்றி வந்தார்.இவர் தனது உறவினர் வீட்டு திருமணத்திற்காக தனது மோட்டார் சைக்கிளில் கடந்த ஞாயிற்றுக்கிழமை திருநின்றவூர் சென்றார். பின்னர்,திருமணம் முடிந்து நேற்று முன்தினம் இரவு தனது வீடு நோக்கி மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தார்.



திருநின்றவூர்- பெரியபாளையம் நெடுஞ்சாலையில் வடமதுரை ஊராட்சியில் உள்ள தனியார் பெட்ரோல் பங்க் அருகே வந்தபோது சாலையின் குறுக்கே நாய் ஒன்று திடீரென வந்ததாம். இதனால் அவர் திடீரென மோட்டார் சைக்கிளை பிரேக் போட்டார். இதில்,நிலை தடுமாறி சாலையில் வைத்திருந்த இரும்பு தடுப்பில் மோதிக்கொண்டார்.

இந்த விபத்தில் படுகாயம் அடைந்து ரத்த வெள்ளத்தில் துடிதுடித்து சம்பவ இடத்திலேயே அருண் பாண்டி பலியானார்.தகவல் அறிந்த பெரியபாளையம் காவல் நிலைய போலீஸ் இன்ஸ்பெக்டர் வெங்கடேசன் தலைமையில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்றனர்.

பலியான அருண்பாண்டி உடலை மீட்டு திருவள்ளூர் அரசு ஆஸ்பத்திரிக்கு பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.மேலும்,வழக்கு பதிவு செய்து இந்த விபத்து குறித்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர்.

# ஆளுநர்கள் 'ரப்பர் ஸ்டாம்ப்'கள் அல்ல தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி ஆவேசம்!




திருவனந்தபுரம், நவ.17-

கேரளா மாநிலம் திருவனந்தபுரத்தில் நடந்த லோக் ஆயுக்தா தின விழாவில் ஆளுநர்கள் 'ரப்பர் ஸ்டாம்ப்'கள் அல்ல என்று தெரிவித்தார்.

விழாவில், தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி கலந்து கொண்டு பேசியதாவது:

ஆளுநர் பதவி அமைப்பு முறை முக்கியமானது. லோக் ஆயுக்தா போன்ற அமைப்பு முறைகளை வலுவிக்கச் செய்யும் வகையில் சட்டத்திருத்தங்கள் கொண்டு வரப்படும்போது, பங்காற்றுவதற்கு ஆளுநர்களுக்கு பொறுப்பு உள்ளது. ஆளுநர்கள் அதில் முடிவெடுக்க வேண்டும். ஏனென்றால் ஆளுநர்கள் ரப்பர் ஸ்டாம்ப்கள் அல்ல.

ஆளுநர் என்ன செய்ய வேண்டும்?. என்ன செய்யக்கூடாது? என்று அனைத்து வகையான குரல்களும் ஒலிக்கப்படுகின்றன. அந்த ஒலிகள் முக்கியமல்ல. முக்கிமானது எதுவென்றால், அது இந்திய அரசியல் அமைப்பு சட்டம். உச்ச நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் அரசியல் அமைப்பை வெளிப்படுத்தும் அமைப்புகள், ஆளுநரின் நடவடிக்கை சரியானதா?, இல்லையா? என்பதை நீதித்துறை முடிவு செய்யும்.

அரசியல் அமைப்பு விதி 200-ன் கீழ் ஒரு மசோதாவுக்கு ஒப்புதல் அளித்ததாகவோ அல்லது மசோதவை தடுத்து நிறுத்துவதாகவோ அல்லது குடியரசு தலைவரின் பரிசீலனைக்காக வைத்திருப்பதாகவோ ஆளுநர் அறிவிக்கலாம். அது அரசியல் அமைப்பு சட்டத்திற்கு உட்பட்டது என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. இவ்வாறு ஆளுநர் ஆர்.என்.ரவி பேசினார்.

# அரசுப்பள்ளிகளில் இருந்து மருத்துவம் பயிலச்செல்லும் மாணவர்களுக்கு வழிகாட்ட "தமிழினி துணைவன்" ரெடி!

சென்னை, நவ.17

அரசுப் பள்ளிகளில் இருந்து மருத்துவம் பயில செல்லும் மாணவர்களுக்கு 2ம் ஆண்டாக வழிகாட்ட "தமிழினி துணைவன்" தயார் என்று அதன் நிறுவனர் தெரிவித்தார்.

இதுகுறித்து "தமிழினி துணைவன்" நிறுவனரும் அரசு மருத்துவருமான டாக்டர் வீ.சி.சுபாஷ் காந்தி தெரிவித்ததாவது:

தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களிலும் உள்ள தமிழினி புலனம் குழுவை சேர்ந்த மருத்துவப் பேராசிரியர்கள், மூத்த மருத்துவர்கள், ஓய்வு பெற்ற மருத்துவர்கள் ஒன்றிணைந்து தமிழ் வழியில் அரசுப்பள்ளியில் படித்து 7.5 இட ஒதுக்கீட்டில் தமிழகம் முழுவதும் மருத்துவக் கல்லூரிகளில் மற்றும் பல் மருத்துவ கல்லூரிகளில் சேர்ந்திருக்கும் மாணவ மாணவிகளுக்கு மருத்துவ கல்வியை சிரமமின்றி அவர்கள் படிப்பதற்கு கட்டணம் இல்லாமல் "தமிழினி துணைவன்" என்ற வாட்ஸ்அப் குழு மருத்துவர் வீ.சி.சுபாஷ் காந்தியால் உருவாக்கப்பட்டுள்ளது.

தமிழகம் முழுவதும் உள்ள மாணவ மாணவிகளுக்கு திங்கள், செவ்வாய், புதன் ஆகிய நாட்களில்மாலை6மணிமுதல் 7 மணி வரை அவர்களுக்கு முதலாமாண்டு மருத்துவ பாடத்தின் கருப்பொருளை பேராசிரியர்கள், மூத்த மருத்துவர்கள் கொண்டு தொடர்ந்து வகுப்புகள் நடத்தி வருகிறோம்.

இதுவரை முதலாம் ஆண்டு மருத்துவ பாடங்களான உடற்கூறு இயல், உடலியங்கியல் மற்றும் உயிர் வேதியியல் உள்ளிட்டவை இணைய வழியில் 107 வகுப்புகள் தமிழில் விளக்கிக் கூறி தொடர்ந்து நடத்தப்பட்டுள்ளது. அவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் வாரம் ஒரு பிரபல மருத்துவ நிபுணர் கலந்து கொள்ளும் வழிகாட்டுதல் மற்றும் ஆலோசனை வகுப்பு, மாதம் ஒருமுறை மனநல ஆலோசனை வகுப்பு என மருத்துவ மாணவ, மாணவிகளுக்கு தொடர்ந்து நடத்தி வருகிறோம்.

மருத்துவக் கல்வியை ஆங்கிலத்தில் எழுதுவதற்கும் பேசுவதற்கும் எளிமையாக்கும் விதமாகவும் முக்கியமான வினாக்களுக்கான விடைகளை மாணவர்களுக்கு எழுதிக்காட்டியும் படம் வரைந்து விளக்கிக் கூறியும் மருத்துவ பேராசிரியர்கள் சரயு, மகேஸ்வரி, நிர்மலா, திருமாறன், நவீன் பிரபாகரன், அஷ்ரப் அலி, தமயந்தி, சௌந்தர்யா, மேரி அருள் பிரியா, வினுபிரதா, ராஜ் கோகிலா ஆகியோர் எளிமையாக்கி வருகின்றார்கள்.

இந்தாண்டு தமிழகம் முழுவதும் அரசுப் பள்ளிகளில் படித்து 7.5 சதவீத இட ஒதுக்கீட்டின் மூலம் 2022 -2023ம் கல்வி ஆண்டில் மருத்துவக் கல்லூரிகளில் சேர்ந்து இருக்கும் 491 மாணவ, மாணவிகளுக்கு வாரந்தோறும் வியாழன், வெள்ளி, சனி கிழமைகளில் மாலை 6 முதல் 7 மணி வரை வகுப்புகள் நடைபெற உள்ளது. எதிர்வரும் நவ.,17ம் தேதி முதல் வகுப்புகள் தொடங்கப்பட உள்ளது. இதற்கு எவ்விதமான கட்டணமும் இல்லை. தமிழினி துணைவன் குழுவில் இணைய டாக்டர்.வீ.சி. சுபாஷ் காந்தி 98949 80802 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

இதற்கான திட்டமிடல் பணிகளை பேராசிரியர் திருவேங்கடம் மற்றும் செவிலிய பேராசிரியர் உமா ஒருங்கிணைத்து வருகின்றனர்.



வேலூர் அக்ஸிலியம் கல்லூரி செல்லும் சாலையில் கனமழையினால் மழைநீர் தேங்கி சேரும் சகதியுமாக இருந்த சாலையை மாவட்ட ஆட்சியர் பெ.குமரவேல் பாண்டியன் பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த சாலையை உடனடியாக சரி செய்ய மாநகராட்சி அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். உடன் மாநகராட்சி ஆணையர் அசோக்குமார் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



புதுவை மாநிலம் காரைக்கால் மீன்வளத் துறையும், மத்திய மீன்வள கடல்சார் பொறியியல் பயிற்சி நிறுவனம், இணைந்து பிரதான் மந்திரி மத்திய சம்பட யோஜான திட்டத்தின் கீழ் காரைக்கால் மாவட்ட மீனவர்களுக்கு பல்வேறு திறன் மேம்பாட்டு பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகிறது. இதன் ஒரு பகுதியாக காளிகுப்பத்தில் உள்ள மீன்வளப் பயிற்சி நிலையத்தில் இன்றிலிருந்துமூன்று நாட்களுக்கு மீன்பிடி படகில் கடற் பயண வழிகாட்டி கருவி மற்றும் தொலைத்தொடர்பு கருவிகளை கையாளுதல் என்ற தலைப்பில் பயிற்சி வகுப்பு நடைபெற்று வருகிறது. இந் நிகழ்ச்சி யின் தொடக்க விழாவில் காரைக்கால் மீன்வளத் துறை துணை இயக்குனர் ரா. சௌந்தர பாண்டியன் விழா வை தொடங்கி வைத்து துவக்கவுரையாற்றினார். பயிற்சியின் நோக்கம் குறித்து மது, முதன்மை பயிற்றுனர் (கடல் மாலுமி மற்றும் செலுத்துனர்) அவர்கள் விளக்க வுரை யாற்றினார். கு. பாலாஜி, ஆய்வாளர் நன்றியுரை வழங்கினார். இப் பயிற்சியில் 30 நபர்கள் பங்கு பெறுகின்றனர்.

# 170 வகை பட்டாம்பூச்சிகள், 228 வகை பறவைகள் கோவை வனக்கோட்ட கணக்கெடுப்பில் தகவல்





கோவை, நவ.17

கோவை வனக்கோட்டத்தில் வனத்துறையுடன், தன்னார்வலர்கள் இணைந்து இரண்டு நாட்கள் நடத்திய கணக்கெடுப்பில் 170 வகை பட்டாம்பூச்சிகள், 228 வகை பறவைகள் இருப்பது தெரியவந்துள்ளது.

கோவை வனக்கோட்டத்தில் உள்ள கோவை, மதுக்கரை, போளுவாம்பட்டி, பெரியநாயக்கன் பாளையம், காரமடை, சிறுமுகை, மேட்டுப்பாளையம் ஆகிய 7 வனச்சரகங்களில் உள்ள பல்வேறு வகையான பறவைகள், பட்டாம்பூச்சிகளை அறிந்துகொள்ள மாவட்ட வன அலுவலர் அசோக்குமாரின் அறிவுறுத்தலின்படி, இயற்கை மற்றும் பட்டாம்பூச்சி அமைப்பு, கோயம்புத்தூர் நேச்சர் சொசைட்டி, டபிள்யு.டபிள்யு. எஃப் இந்தியா ஆகிய அமைப்புகள் இணைந்து கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்டன.

கோவை வனக்கோட்ட உதவி வனப்பாதுகாவலர்கள் தினேஷ்குமார், செந்தில்குமார், வனச்சரகர்கள் மேற்பார்வையில் இந்த கணக்கெடுப்பு பணி நடைபெற்றது. கணக்கெடுப்பில் மொத்தம் 82 தன்னார்வலர்கள், வனப்பணியாளர்கள் அடங்கிய 16 குழுக்கள் ஈடுபட்டன. இதில், மொத்தம் 170 வகை பட்டாம்பூச்சிகள், 228 வகை பறவைகள் தென்பட்டுள்ளன.

இதுதொடர்பாக, மாவட்ட வன அலுவலர் டி.கே. அசோக்குமார் கூறுகையில், "தொடர்ந்து 4-வது ஆண்டாக நடைபெறும் இந்த கணக்கெடுப்பு பணியின்மூலம் குறிப்பிட்ட பகுதிகளில் உள்ள பல்லுயிர் பரவல் தெரியவந்துள்ளது. இதுபோன்ற கணக்கெடுப்பு பணியின் மூலம் கிடைக்கும் தகவல்கள் குறிப்பிட்ட வகை உயிரினங்களை காப்பதற்கான திட்டமிலுக்கு உதவிகரமாக இருக்கும்," என்றார்.

# சென்னை ஆக்ஸ்ஃபா பல்கலைக்கழகத்தில் நூல் வெளியீட்டு விழா



சென்னை , நவ.17

சென்னை ஆக்ஸ்ஃபா பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற புதுவை மாநில போக்குவரத்து துறை அமைச்சர் மனிதநேயமிக்க சிறப்பான சேவைக்கு கௌரவ டாக்டர் பட்டம் அளிக்கும் விழா மற்றும் நூல் வெளியீட்டு விழாவில் புதுச்சேரி போக்குவரத்து துறை அமைச்சர் சந்திர பிரியங்கா பங்கேற்றார்.

அறம் செய விரும்பு டிரஸ்ட் மற்றும் ஆக்ஸ்ஃபா பல்கலைக்கழகம் ஏற்பாடு செய்திருந்த இவ்விழாவில் சென்னை உயர் நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதியரசர் ஜகதீசன் சுயசரிதை புத்தகத்தினை அமைச்சர் சந்திர பிரியங்கா வெளியிட்டார். மேலும்

அமைச்சர் சந்திர பிரியங்கா அரசியல் சமூகப் பணிகளையும் சிறப்பான சேவையையும் அங்கீகரிக்கும் விதத்தில் அவருக்கு ஆக்ஸ்ஃபா பல்கலைக்கழகம் சார்பில் "கௌரவ டாக்டர்" பட்டம் வழங்கி சிறப்பித்தனர். இவ்விழாவில், நீதியின் குரல் மற்றும் மக்கள் தொலைக்காட்சி ஒருங்கிணைப்பாளர் மற்றும் ஆக்ஸ்பா பல்கலைக்கழக சேர்மேன் பாஸ்கரன், அறம் செய விரும்பு டிரஸ்ட் மேலாண் இயக்குனர் நல்லமணி ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர்கள். கௌரவ டாக்டர் பட்டத்தை பெற்றுக்கொண்ட போக்குவரத்து துறை அமைச்சர் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# ஆரோக்கியத்திற்கு பாரம்பரிய இயற்கை உணவுகளை உட்கொள்ள வேண்டும்

## வேலூர் கலெக்டர் குமாரவேல் பாண்டியன் பேச்சு



வேலூர் , நவ.17

வேலூர் மாவட்டம், காட்பாடி ஆக்ஸிலியம் மகளிர் கல்லூரி வளாகத்தில் பாரம்பரிய உணவுத் திருவிழா நடைபெற்றது. இந்த விழாவில் தலைமை வகித்து பேசிய மாவட்ட ஆட்சியர் பெ.குமாரவேல் பாண்டியன் பாரம்பரிய உணவுகளை உண்ணுவதற்கு குழந்தைகளுக்கு கற்றுத் தர வேண்டும் .

வீடுகளிலும் இளைய தலைமுறைக்கு கட்டாயம் இவற்றை சமைத்து சாப்பிட கற்றுக் கொடுக்க வேண்டும். பாரம்பரியம் இல்லாத பல்வேறு உணவுகளை சாப்பிடுவதால் நமது பாரம்பரியம் மறக்கப்படுவதுடன், மறைக்கப்படுகிறது என்று சொல்லலாம், பாரம்பரிய உணவு பற்றி குடும்பத்தில் உள்ள அனைவரும் தெரிந்து கொள்ளும் வகையில் நீங்கள் சொல்ல வேண்டும்.

கல்லூரி மாணவிகள் பாரம்பரிய உணவுகளை சமைத்து சாப்பிடுவதற்கு தங்களை ஆயத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். அந்த உணவுகளை முறையாக உட்கொண்டால் ஆரோக்கியமாக வாழலாம் நீண்ட ஆயுளையும் பெறலாம் என்றார்.

இந்நிகழ்ச்சியில் குடியாத்தம் தொகுதி எம்எல்ஏ அமுலு விஜயன், வேலூர் மாநகராட்சி துணை மேயர் சுனில்குமார், வேலூர் மாநகராட்சி காட்பாடி 1வது மண்டல குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, ஆக்சீலியம் கல்லூரி முதல்வர் ஜெயசாந்தி, கோமதி மற்றும் அனைத்து வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# பொதுமக்களுக்கு கொசுவலை வழங்கிய அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் பிரியா ராஜன்



சென்னை , நவ.17

பெருநகர சென்னை மாநகராட்சி தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க தண்டையார்பேட்டை மாநகராட்சி 4 வது மண்டலத்திற்கு உட்பட்ட ஆர்கே நகர், பெரம்பூர் தொகுதிக்குட்பட்ட நீர் நிலை பகுதிகளில் வசிக்கின்ற பொதுமக்களுக்கு கொசுவலை வழங்கும் நிகழ்ச்சி தண்டையார்பேட்டை மாநகராட்சி மண்டல குழு தலைவர் நேதாஜி யு.கணேசன் தலைமையில் ஆர் கே நகர் சட்டமன்ற உறுப்பினர் ஜே ஜே எபிநேசர் முன்னிலையில் மண்டல அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே சேகர்பாபு, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி விராசாமி, சென்னை மாநகராட்சி மேயர் ஆர் பிரியா. ராஜன் கலந்து கொண்டு பொதுமக்களுக்கு கொசுவலை வழங்கினார்.

நிகழ்ச்சியில் பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி. சேகர், இராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் இரா. மூர்த்தி ஆர் கே. நகர் பகுதி செயலாளர்கள் லட்சுமணன், ஜெபதாஸ் பாண்டியன், மாமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்

# மயிலாடுதுறை காவிரி ஆற்றின் துலா உற்சவ தீர்த்தவாரி பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் ஒரே நேரத்தில் புனித நீராடினர்

மயிலாடுதுறை , நவ.17

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை காவிரி ஆற்றின் இருபுறமும் அமைந்துள்ள பழமையான நகரமாகும். மயிலாடுதுறை நகரின் மேன்மை குறித்து 1200 ஆண்டுகளுக்கு திருஞானசம்பந்தர் தேவார பதிகங்களில் 11 தனி பாடல்கள் பாடியுள்ளார். அந்தப் பாடல்களில் மயிலாடுதுறை நகரின் பழமை பற்றியும் ஆன்மீக சிறப்பு பற்றியும் செந்தமிழ் பாடலாக பாடியுள்ள திருஞானசம்பந்தர் வரமா மயிலாடுதுறை என்று மயிலாடுதுறை வரங்கள் நிறைந்த ஊர் என்றும் குறிப்பிடுகின்றார்.

சிவபெருமானின் சொந்த ஊர் என்று அந்தப்பாடல்களில் பாடியுள்ள நிலையில், மயிலாடுதுறையில் காவிரி ஆற்றை மையப்படுத்தி அனைத்து கோயில்களிலும் ஐப்பசி மாதம் நடைபெறும் துலா உற்சவம் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். மயிலாடுதுறை காவிரி கரையில் மயூரநாதர் ஆலயம் வதான்யேஸ்வரர் ஆலயம் ஐயாரப்பர் ஆலயம் புனுகீஸ்வரர் ஆலயம், காசி விஸ்வநாதர் ஆலயம் தெப்பக்குளம் விஸ்வநாதர் ஆலயம் படித்துறை விஸ்வநாதர் ஆலயம் உள்ளிட்ட சிவாலயங்கள்108 வைணவ திவ்ய தேசங்களில் ஒன்றான பரிமள ரங்கநாதர் ஆலயம் ஆகியவற்றில் ஐப்பசி மாதம் கடைசி பத்து நாட்கள் கொடியேற்றத்துடன் விழா நடைபெறுவது வழக்கம் திருத்தேர் உற்சவம் திருக்கல்யாணம் தீர்த்தவாரி நிகழ்ச்சிகள் நடைபெறும். இந்த ஆண்டு மயூரநாதர் ஆலயத்தில் கும்பாபிஷேக பணிகள் நடப்பதால் அதனை தவிர்த்து மற்ற ஆலயங்களில் கடந்த ஏழாம் தேதி கொடியேற்றத்துடன் விழா துவங்கி நடைபெற்று வருகிறது. விழாவின் முக்கிய நிகழ்ச்சியான காவிரி தீர்த்தவாரி நேற்று நடைபெற்றது.

ஆற்றின் தென்கரைக்கு ரிஷப தீர்த்தம் என்றும், வலது கரைக்கு ஞான புஷ்கரணி தீர்த்தம் என்றும் பெயர். ஆற்றில் உள்ளே 16 தீர்க்க கிணறுகள் அமைந்துள்ளன. புனிதம் வாய்ந்த இடமாக கருதப்படும் காவிரி



ஆற்றில் கங்கை யமுனை சரஸ்வதி நர்மதா கோதாவரி உள்ளிட்ட ஏழு புண்ணிய நதிகள் தங்கள் பாவங்களை போக்கிக் கொள்ள காவிரியில் நீராடுவதாக ஐதீகம்.

ரிஷப தேவரின் செறுக்கை இங்கே இறைவன் அடக்கியதாக புராண வரலாறு கூறுகிறது எனவே காவிரியின் நடுவே ஆற்றின் நீரோட்டத்தில் எதிர்புறமாக மேற்கு நோக்கியவாறு நந்தி தேவருக்கு என்று தனி சன்னதி அமைந்துள்ளது. சிறப்பு வாய்ந்த புனித தீர்த்தமான மயிலாடுதுறை காவிரி ஆற்றில் நேற்று தீர்த்தவாரி நடைபெறுவதை முன்னிட்டு இரு கரைகளிலும் அனைத்து ஆலயங்களில் இருந்து சுவாமி அம்பாள் மற்றும் பஞ்ச மூர்த்திகள் பக்தர்களுக்கு காட்சியளித்து தீர்த்தவாரி அளித்தனர்.

அனைத்துஆலயங்களின் அஸ்திர தேவருக்கும் காவிரி கரையில் பால் பன்னீர் இளநீர் சந்தனம் தயிர் தேன் நெய் உள்ளிட்ட 16 வகை திரவிய பொருட்களால் சிறப்பு அபிஷேகம் செய்யப்பட்டது தொடர்ந்து காவிரி ஆற்றில் தீர்த்தவாரி நடைபெற்றது. தருமபுரம் ஆதின 27-ஆவது மடாதிபதி ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக ஞான சம்பந்த பரமாச்சார சுவாமிகள், மயிலாடுதுறை மாவட்ட திமுக செயலாளரும் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினருமான நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ராஜ்குமார், நகர் மன்ற தலைவர் செல்வராஜ் உள்ளிட்ட பல்லாயிரக்கணக்கான பக்தர்கள் புனித நீராடினர். இதற்காக மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பக்தர்கள் புனித நீராட வருகை தந்துள்ளனர்.

இதற்காக மயிலாடுதுறை எஸ்பி நிஷா தலைமையில் அதிரடிப்படை போலீசார் உள்ளிட்ட 350 காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். திருவாரூர் தஞ்சையைச் சேர்ந்த 60 அதிரடி படையினர் மற்றும் ஊர்க்காவல் படையினர் தீயணைப்பு படையினர் மாநில பேரிடர் மேலாண்மை காவல்துறையினர் உள்ளிட்டோர் பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர்

# மாற்றுத்திறன் மாணவருக்கான விழிப்புணர்வு பேரணி அன்னவாசல் ஒன்றியம், கறம்பக்குடியில் நடந்தது



கறம்பக்குடி, நவ.17
டிசம்பர் 3ம் தேதி உலக மாற்றுத்திறனாளிகள் தினம் கொண்டாடப்படும் நிலையில் மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும், மக்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த அன்னவாசல் ஒன்றியம் மற்றும் கறம்பக்குடியில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கான விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

முக்கணாமலைப் பட்டியில் நடந்த விழிப்புணர்வு பேரணியை மாவட்ட உதவி திட்ட அலுவலர் தங்கமணி தொடங்கி வைத்தார். இதில் புள்ளியியல் அலுவலர் உஷா, வட்டார வளமைய பயிற்றுநர் கவிதா, விஜயகுமார், இயன்முறை மருத்துவர் கோவிந்தசாமி உடனிருந்தனர்.

காவிரி நகர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடந்த விழிப்புணர்வு பேரணியை பள்ளித்தலைமை ஆசிரியர் வின்சென்ட், பள்ளி மேலாண்மைக் குழு உறுப்பினர்கள் தொடங்கி வைத்தனர்.

கறம்பக்குடி தாலுகா மழையூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடந்த விழிப்புணர்வு பேரணியை தலைமை ஆசிரியர் அரங்கசாமி, வருவாய் ஆய்வாளர் அன்னக்கொடி, மழையூர் காவல் உதவி ஆய்வாளர் சரவணன் ஆகியோர் தொடங்கி வைத்தனர்.

நிகழ்ச்சி ஏற்பாடுகளை கறம்பக்குடி வட்டார வளமைய சிறப்பாசிரியர்கள் ஜான்சிராணி, கலைச்செல்வி செய்திருந்தனர். நிகழ்ச்சியில் ஆசிரியர் பயிற்றுநர் செல்லத்துரை மற்றும் பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

பேரணியில் பங்கேற்ற மாணவர்கள் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்கள் குறித்த விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி கோஷங்களை முழக்கி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.




# மழையால் வீடுகள் சேதம்! நிதி, நிவாரணம் வழங்கல்



மதுரை, நவ.17
மதுரை மாவட்டம் திருமங்கலம் ஒன்றியத்திற்குட்பட்ட சாத்தங்குடி பண்ணி குண்டு கிராமத்தில் மழையால் வீடுகள் சேதமடைந்தவர்களுக்கு தி.மு.க., தெற்கு மாவட்ட செயலாளர் மணிமாறன் உதவித்தொகை மற்றும் நிவாரண பொருட்களை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், தலைமை செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் பாண்டியன், ஒன்றிய செயலாளர் தன பாண்டியன், நகர செயலாளர் ஸ்ரீதர், பொதுக்குழு உறுப்பினர்கள் செல்வம், சிவமுருகன், விமல், சுரேஷ், கருவேலம்பட்டி வெற்றி, ஆலங்குளம் செல்வம், பெருங்குடி வசந்த், ஐ.டி, பிரிவு ராஜ பிரபாகரன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# மழையால் பாதித்த மக்களுக்கு எடப்பாடி பழனிசாமி நிவாரணம்

மயிலாடுதுறை, நவ.17
மழையால் பாதிக்கப்பட்ட சிதம்பரம் தொகுதி மக்களை நேரில் சந்தித்த எடப்பாடி பழனிசாமி நேற்று நிவாரண உதவிகளை வழங்கினார்.



அதிமுக, இடைக்காலப் பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி தமிழகத்தில் பெய்த பருவமழை காரணமாக பாதிக்கப்பட்ட கடலூர் மாவட்டம் சிதம்பரம் தொகுதி வல்லம்படுகை கிராமத்திற்கு நேற்று நேரில் சென்று அப்பகுதி மக்களுக்கு ஆறுதல் தெரிவித்தார்.

மேலும், கடலூர் கிழக்கு அதிமுக., மாவட்ட செயலாளர் பாண்டியன் ஏற்பாடு செய்திருந்த நலத்திட்ட உதவிகளை பாதிக்கப்பட்ட மக்களுக்கு நேரில் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அதி.மு.க., அமைப்புச் செயலாளர் முருகுமாறன், கடலூர் மேற்கு மாவட்ட செயலாளர் அருண்மொழிதேவன், தலைமை செயற்குழு உறுப்பினரும், முன்னாள் அமைச்சருமான செல்வி ராமஜெயம், புரட்சி தலைவி பேரவை துணை செயலாளர் அருள் உள்ளிட்ட நிர்வாகிகள் உடனிருந்தனர்.

அதனை தொடர்ந்து:- சீர்காழியில் கடந்த 10, 11 ஆகிய தேதிகளில் மிகக் கனமழை பெய்தது. சீர்காழியில் ஒரே நாளில் 44 செ.மீ. மழை பெய்ததால், சுமார் 90 ஆயிரம் ஏக்கர் பரப்பிலான நெற்பயிர்கள் நீரில் மூழ்கியுள்ளன. ஏராளமான குடியிருப்புகளை மழை நீர் சூழ்ந்ததால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது. முதல்வர் மு.க ஸ்டாலின் 14ம் தேதி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து, பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கிச் சென்றார்.

இந்த நிலையில் எதிர்க்கட்சித் தலைவர் சீர்காழி பகுதியில் ஆய்வு மேற்கொண்டார். சீர்காழி அருகே உள்ள நல்லூர், பனீர்க்கோட்டம், ஆலங்குடி உள்ளிட்டப் பகுதிகளில் பார்வையிட்டு விவசாயிகளிடம் பாதிப்புகள், குறைகள் குறித்து கேட்டறிந்தார்.

விவசாயிகள் வயலில் இறங்கி அழுகிய பயிர்களை எடுத்துக் காண்பித்து உரிய நிவாரண உதவி கிடைக்க ஏற்பாடு செய்யுமாறு கேட்டுக் கொண்டனர். இந்த ஆய்வின் போது முன்னாள் அமைச்சர் ஓ.எஸ். மணியன், முன்னாள் சட்டப்பேரவை உறுப்பினர்கள் எஸ். பவுன்ராஜ், பி.வி. பாரதி வி.ராதாகிருஷ்ணன் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.

திருவாலி ஏரி உட்பட கடைமடை பகுதியில் உள்ள அனைத்து பாசன வடிகால் வாய்க்கால்களையும் தூர்வாரி மழை நீரை வடிய வைக்க போர்க்கால அடிப்படையில் நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் மழையால் பாதிக்கப்பட்ட பயிர்களை அதிகாரிகளை கொண்டு முறையாக கணக்கெடுத்து நிவாரண உதவிகளை அறிவிக்க வேண்டும் என்றார். இதில் முன்னாள் அமைச்சர் ஓ.எஸ்.மணியன், மாவட்ட செயலாளர் பவுன்ராஜ் மற்றும் ஏராளமான அதிமுகவினர் கலந்து கொண்டனர்.

# தமிழகம் முழுவதும் கடலோர பாதுகாப்பு ஒத்திகை உஷார் நிலையில் 13 கடலோர மாவட்டங்கள்!



சென்னை, நவ.17
மும்பையில் கடந்த 2008ம் ஆண்டு கடல் வழியாக புகுந்து பயங்கரவாதிகள் தாக்குதல் நடத்திய சம்பவத்தை தொடர்ந்து பாதுகாப்பை பலப்படுத்தும் வகையில் ஆண்டுக்கு 2 முறை பாதுகாப்பு ஒத்திகை நடத்தப்பட்டு வருகிறது. 'சிவிஜில் 2022' என்ற பெயரில் நேற்றுமுன்தினம் தொடங்கிய பாதுகாப்பு ஒத்திகை தமிழகம் முழுவதும் நேற்று 2-வது நாளாக நடைபெற்றது.

சென்னை முதல் கன்னியாகுமரி வரையில் உள்ள 13 கடலோர மாவட்டங்களிலும் நடைபெற்ற பாதுகாப்பு ஒத்திகையில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கடலோர பாதுகாப்பு படையினர் மற்றும் உள்ளூர் போலீசாரும் ஈடுபட்டனர்.

சென்னையில் மெரினா கடற்கரை மற்றும் பட்டினப்பாக்கம் கடலோர பகுதிகளில் 2-வது நாளாக பாதுகாப்பு ஒத்திகை நடத்தப்பட்டது. கடலோர மாவட்டங்களில் பயங்கரவாதிகள் போல ஊடுருவியவர்களை பல இடங்களில் போலீசார் மடக்கி பிடித்தனர். சில பகுதிகளில் கோட்டை விட்டனர். இறுதி நாளான நேற்றும் கடலோர பாதுகாப்பு படையினருடன் சுங்கத்துறையினரும் இணைந்து ஒத்திகையில் ஈடுபட்டனர்.

இதையடுத்து கடலோர பகுதிகள் அனைத்தும் போலீசாரின் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது. கண்காணிப்பு பணிகளும் தீவிரப்படுத்தப்பட்டிருந்தன. கன்னியாகுமரி கடலோர பாதுகாப்பு குழும போலீசார் 2 அதிநவீன ரோந்து படகுகள் மூலம் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டனர்.

சின்னமுட்டம், பஞ்சலிங்கபுரம், மகாதானபுரம், தேங்காய்பட்டணம், கூடங்குளம் உள்பட 10 இடங்களில் உள்ள கடலோர பாதுகாப்பு குழும போலீசுக்கு சொந்தமான சோதனை சாவடிகளில் போலீசார் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது, கடற்கரை வழியாக பயங்கரவாதிகள் போல் 4 பேர் நடித்து ஒரு படகில் தப்பிச்செல்ல முயன்றனர். அவர்களை கடலோர பாதுகாப்பு குழும போலீசார் மடக்கி பிடித்து தங்கள் திறமையை வெளிப்படுத்தினர்.

# அக்கச்சிப்பட்டி பள்ளிக்கு ரூ.4 லட்சத்தில் கல்வி சீர் வழங்கல்

**கந்தர்வக்கோட்டை, நவ.17**
கந்தர்வக்கோட்டை ஒன்றியம் அக்கச்சிப்பட்டி ஊராட்சி ஒன்றியம் நடுநிலைப்பள்ளிக்கு கல்வி சீர் வழங்கும் விழா நடந்தது.



விழாவில், சுவாமிநாதன் தலைமை வகித்தார். வட்டாரக் கல்வி அலுவலர் வெங்கடேஸ்வரி, காவல் உதவி ஆய்வாளர் ரித்தின், ஊராட்சி மன்றத் தலைவர் கங்காதரன் தலைமை வகித்தார். கல்வி சீர் வழங்கும் விழாவினை வட்டார வளர்ச்சி அலுவலர் ஸ்ரீ தரன் தொடங்கி வைத்தார். மாவட்ட கவுன்சிலர் ஸ்டாலின், பேராசிரியர் அமுதா, முன்னாள் தலைவர் வீராசாமி, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவர் ராஜேந்திரன், பொருளாளர் அச்சுதன், பள்ளி மேலாண்மை குழுத்தலைவி இலக்கியா முன்னிலை வகித்தனர்.

கந்தர்வக்கோட்டை, அக்கச்சிப்பட்டி, இந்திரா நகர், மண்டேலா நகர் ஆகிய பகுதி மாணவர்கள் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் பயின்று வருகின்றனர். அப்பகுதியில் உள்ள மாணவர்களின் பெற்றோர்கள், ஊர் மக்கள் ரூ.4 லட்சம் மதிப்பிலான கல்வி சீர் பொருட்களான ஸ்மார்ட் டிவி, ஸ்மார்போர்ட், டேபிள்,சேர், இரும்பு புத்தக அலமாரி, பிளாஸ்டிக் சேர், மின்விசிறிகள், விளையாட்டு பொருட்கள், அறிவியல் உபகரணங்கள், தாம்பள தட்டு உள்ளிட்ட 200க்கும் மேற்பட்ட பொருட்களை, 70க்கும் மேற்பட்ட நன்கொடையாளர்கள் கல்வி சீராக வழங்கினர்.

முன்னதாக கல்வி சீர் பொருட்களை கந்தர்வகோட்டை வெள்ளை முனியன் கோயிலில் இருந்து அக்கசிப்பட்டி வரை மேளதாளத்துடன் எடுத்து வந்தனர். தலைமை ஆசிரியர் தமிழ்செல்வி வரவேற்றார். ஆங்கில பட்டதாரி ஆசிரியர் ஆனந்தராஜ் தொகுத்து வழங்கினார். மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் நடந்தன



▶ வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு பிரிவின் சார்பாக மாவட்ட அளவிலான (எச்.ஐ.வி) எய்ட்ஸ் குறித்து விழிப்புணர்வு கிராமிய கலை பிரச்சார பயணத்தை மாவட்ட வருவாய் அலுவலர் இராமமூர்த்தி கொடியசைத்து தொடங்கி வைத்தார். துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் பானுமதி, மாவட்ட எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அலுவலர் ஆனந்த சித்ரா மற்றும் துறைச்சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

# மாணவர்களுக்கு உபகரணம் வழங்கல் சசிகுமார் நலபணி இயக்கம் ஏற்பாடு

அன்னவாசல், நவ.17-
அன்னவாசல் அருகிலுள்ள லெக்கனாப் பட்டியில் சசிகுமார் நலபணி இயக்கத்தின் ஆலோசனை கூட்டம் மற்றும் பள்ளி மாணவர்களுக்கு உபகரணங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது



சசிகுமார் நலபணி இயக்கத்தின் சார்பாக லெக்கனாப்பட்டியில் அமைந்துள்ள தொடக்கப்பள்ளியில் பயின்று வந்த 120 குழந்தைகளுக்கு இலவச நோட், பேனா, பென்சில், ரப்பர், அளவுகோல் உள்ளிட்டவைகள் வழங்கப்பட்டன. அதை தொடர்ந்து ஒரு ஏழை குடும்பத்திற்கு ஒரு மாதத்திற்கு தேவையான மளிகை பொருட்கள் வழங்கப்பட்டன.

இந்நிகழ்வில் புதுக்கோட்டை மாவட்ட தலைவர் ராஜ்குமார், மாவட்ட செயலாளர் ரெங்கன், மாவட்ட பொருளாளர் ரமேஷ், மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அழகர்சாமி மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




# கடையநல்லூரில் பா.ஜ., ஆர்ப்பாட்டம்

*தென்காசி, நவ.17*
தென்காசி மாவட்டம் கடையநல்லூர் பி.எஸ்.என்.எல்., அலுவலகம் முன் பா.ஜ., கட்சி மண்டலம் சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.



ஆர்ப்பாட்டத்தில், சுப்பிரமணியம் தலைமை வகித்தார். நகரத் துணைத் தலைவர் சங்கரநாராயணன், வெளிநாடு வாழ் தமிழர் வளர்ச்சி பிரிவு தலைவர் பாலீஸ்வரன் முன்னிலை வகித்தார். பால் விலை, மின் கட்டணம், சொத்து வரி உயர்வு கண்டித்து கோஷங்கள் எழுப்பப்பட்டது.

ஆர்பாட்டத்தில், நகரத் தலைவர் சுப்பிரமணியம், ராமநாதன், மாரி, சூரிய பிரகாஷ், காளிராஜ், மோகன், வேலாயுதம், ஜெயக்குமார், மாரிராஜ், காளிமுத்து, மாரிக்கண்ணன், சங்கர், கார்த்திக்,சங்கரநாராயணன், காளியப்பன், மாணிக்க சாமி, கந்தசாமி, இசக்கிதுரை, இசக்கி, ரவிச்சந்திரன், கண்ணன், மாதவன், ராஜேஷ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# அன்னவாசல் ஊராட்சி ஒன்றிய கூட்டம்

*அன்னவாசல், நவ.17-*
அன்னவாசல் ஊராட்சி ஒன்றிய அலுவலக கூட்ட அரங்கத்தில் ஒன்றியக்குழு கூட்டம் நடைபெற்றது.



கூட்டத்திற்கு ஒன்றியக்குழுத் தலைவர் ராமசாமி தலைமை தாங்கினார். துணைத்தலைவர் கல்யாணி மாரிமுத்து முன்னிலை வகித்தார். கூட்டத்தில் அலுவலக மேலாளர் கணேசன், ஒன்றியக்குழு கூட்டத்தின் மன்ற பொருட்களை வாசித்தார்.

பின்னர் அ.தி.மு.க., கவுன்சிலர் சிம்பசிவம் தி.மு.க., கவுன்சிலர்கள் ராசப்பன், தீத்தப்பன், கண்ணதாசன், கோவிந்தராஜ் ஆகியோர் மன்ற பொருட்கள் குறித்தும் செயல்படுத்த வேண்டிய கோரிக்கைகள் குறித்துகேள்விஎழுப்பினர்.

பின்னர் உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளுக்கு ஒன்றியக்குழு தலைவர் ராமசாமி மற்றும் வட்டார வளர்ச்சி அலுவலர் பிரேமாவதி, ஆனந்தன் ஆகியோர் பதில் அளித்தனர். கூட்டத்தில், பல்வேறு தீர்மானங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதில், அ.தி.மு.க., தி.மு.க., காங்கிரஸ் கவுன்சிலர்கள் மற்றும் ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள், பொதுப்பணித்துறை அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# உளுந்தூர்பேட்டையில் மாற்றுத்திறன் மாணவர்கள் பற்றிய விழிப்புணர்வு பேரணி

*கள்ளக்குறிச்சி, 17_*
கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் ஒருங்கிணைந்த பள்ளி கல்வி திட்டத்தின் கீழ், உளுந்தூர்பேட்டை வட்டார வளமையம் சார்பில், உலக மாற்றுத்திறனாளிகள் தினம் முன்னிட்டு, மாற்றுத்திறன் மாணவர்கள் பற்றிய விழிப்புணர்வு பேரணி ஊராட்சி ஒன்றிய இந்து நடுநிலைப்பள்ளி வளாகத்தில்நடைபெற்றது.



இப்பேரணியை வட்டார வளமைய மேற்பார்வையாளர் அருன் செல்வம் கொடியசைத்து துவக்கி வைத்தார். இப்பேரணி பள்ளி வளாகத்தில் துவங்கி மக்கள் அதிகம் கூடும் இடங்களான பேருந்து நிலையம் வழியாகதிருச்சி செல்லும் சந்திப்பு சாலைவரை சென்று மீண்டும் பள்ளி வளாகத்தில் நிறைவு பெற்றது.

விழிப்புணர்வு பேரணியில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுடன் அனைவரும்இணைவோம், அனைவரும் உயர்வோம் உள்ளிட்ட வாசகங்கள் அடங்கிய பாதகைகள் ஏந்தியபடி சென்றனர்.

இந்நிகழ்ச்சியில் ஆசிரியர் பயிற்றுநர்கள் சக்திவேல், காசிலிங்கம், அரசு, சுரேஷ், ஆறுமுகம், ரேஷ்மா, சாந்தகுமாரி, சரிதா, ரம்யா, சிறப்பு பயிற்றுநர்கள் கோமதி, ராஜலட்சுமி, சரன்யா, ராதா, புஷ்பா மற்றும் இருபால் ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். சிறப்பு பயிற்றுநர் ஜானகிராமன் நன்றி கூறினார்.



▶ சென்னை, திருவல்லிக்கேணி, மகாகவி பாரதியார் நினைவு இல்லத்தில் செய்தித்துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் தமிழ்நாடு பத்திரிக்கையாளர் சங்கம் சார்பில் நடைபெற்ற தேசிய பத்திரிக்கையாளர் தின விழாவில் செய்தியாளர்களுக்கு பத்திரிக்கையாளர் நல சங்கத்தின் சார்பில் ரூபாய் ஒரு லட்சம் மதிப்பிலான விபத்து காப்பீடு அட்டையை வழங்கினார். உடன் அரசு தலைமை கொறடா கோவி செழியன், எழுத்தாளர் - பதிப்பாளர் லேனா தமிழ்வாணன் மற்றும் பத்திரிகையாளர் நல சங்க நிர்வாகிகள் உள்ளனர்.

## வேலைக்குச் சென்றபோது காணாமல் போன எலக்ட்ரீசியன்

# ஆரணி ஆற்றில் புதுப்பாளையம் தரைப்பாலம் அருகே நீரில் பிணமாக மீட்பு

ஊத்துக்கோட்டை, நவ17-
திருவள்ளூர் மாவட்டம், பெரியபாளையம் அருகே உள்ள ராள்ளபாடி கிராமத்தில் வசித்து வந்தவர் முருகன் (வயது34). எலக்ட்ரீசியன் வேலை செய்து வந்தார்.இவருக்கும் வடமதுரை,பேட்டைமேடு காலனியைச் சேர்ந்த அம்மு என்பவருக்கும் திருமணம் நடைபெற்றது. இத்தம்பதியினருக்கு கீர்த்தனா(வயது8) என்ற மகளும்,ஓவியன்(வயது6) என்ற மகனும் உள்ளனர். இந்நிலையில்,கணவன் மனைவிக்கு இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டதால் இருவரும் பிரிந்து வாழ்ந்து வந்தனர்.

இந்நிலையில்,கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை வீட்டில் இருந்த தனது தாய் தேவகியிடம் வேலைக்கு செல்வதாக கூறிவிட்டு முருகன் வெளியே சென்றார். பின்னர்,வீடு திரும்பவில்லை. பல்வேறு இடங்களில் தேடியும் அவரை கண்டுபிடிக்க முடியவில்லை. இந்நிலையில், காணாமல் போன தனது மகனை கண்டுபிடித்துதருமாறு தேவகி பெரியபாளையம் காவல் நிலையத்தில் திங்கட்கிழமை மதியம் புகார் செய்திருந்தார்.



இந்நிலையில்,நேற்று மாலை ஆரணி ஆற்றில் புதுப்பாளையம்-அஞ்சாத்தம்மன் கோவில் இடையே உள்ள தரைப்பாலத்தின் அருகே தண்ணீரில் பிணம் ஒன்று மிதப்பதாக பெரியபாளையம் காவல் நிலைய போலீசாருக்கு தகவல் கிடைத்தது.எனவே,போலீஸ் இன்ஸ்பெக்டர் வெங்கடேசன் தலைமையில் போலீசார் சம்பவ இடத்திற்கு விரைந்து வந்தனர்.பிணத்தை கைப்பற்றி திருவள்ளூர் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர்.

விசாரணையில் காணாமல் போன முருகன் தண்ணீரில் மூழ்கி இறந்ததை போலீசார் உறுதி செய்தனர். வேலைக்கு சென்றவர் எப்படி? ஆரணி ஆற்று நீரில் மூழ்கி பலியானார். என போலீசார் வழக்கு பதிவு செய்து பல்வேறு கோணங்களில் விசாரணை செய்து வருகின்றனர்.

Owned & Published by **S.Sivasakthivel**, Published From : Plot No. 1103, Periyar Nagar, Rajagopalapuram Post, Pudukkottai, and Printed By: **K.selvaraj** Printed at: Jayam Offset Printers, 5623, South 4th Street, Pudukkottai. Editor: **S.Sivasakthivel**. Phone:04322-261577.
**Chennai Office: Chief Reporter S.Kadar Hussain,** ISR MEDIA ONE, Old no:112, New no:235, 4th floor, Angappa Naicken Street, Parrys, Chennai-600 001. (Near GT Court Way). PH-9840728971. E-Mail:pudugaivaralaru@gmail.com, pudugaivaralaru2@gmail.com, pontimesrep@gmail.com

புதுகை
வரலாறு
நாளிதழ்

நிறுவனத்தில் பணிபுரிய
செய்தியாளர்கள் தேவை

நாளிதழ் மற்றும் தொலைக்காட்சிகளில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை

தமிழகம் முழுவதும் மாவட்டம் மற்றும் தாலுகாக்கள் வாரியாக பணியாற்றிட செய்தியாளர்கள் & புகைப்படக்காரர்கள் தேவை.
தபால் மூலமாக மட்டும் விண்ணப்பிக்கவும்.

தபால் அனுப்பவேண்டிய முகவரி :
TS.No.1103, பெரியார் நகர், இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை - 3. செல் : 98420 98534

புதுகை
வரலாறு
நாளிதழ்

நிறுவனத்தில் பணிபுரிய
ஆட்கள் தேவை

காலிப் பணிஇடங்கள் 2

PHOTOSHOP | PAGEMAKER | INDESIGN


தமிழ் தட்டச்சு நன்கு பயின்ற மற்றும் அனுபவம் உள்ள DTP ஆப்பரேட்டர்கள்
சமூக ஊடகத்தில் ஆர்வமுள்ளோர் உடனடி தேவை.

நாளிதழ் மற்றும் தொலைக்காட்சிகளில் பணியாற்றியவர்களுக்கு முன்னுரிமை

திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்

தமிழகம் முழுவதும் மாவட்டம் மற்றும் தாலுகா வாரியாக பணியாற்றிட செய்தியாளர்கள் & புகைப்படக்காரர்கள் தேவை. தபால் மூலமாக மட்டும் விண்ணப்பிக்கவும்


மேலும் தொடர்புக்கு :
TS.No.1103, பெரியார் நகர், இராஜகோபாலபுரம், புதுக்கோட்டை - 3. செல் : 98420 98534



# ஜி 20 கூட்டமைப்பிற்கு தலைமை ஏற்றது இந்தியா

# மாற்றுத்திறனாளி மாணவருக்கு புதுகை அருகே கொடுமை



# ஆளுநர்கள் ரப்பர் ஸ்டாம்பா? ஆர்.என்.ரவி கொந்தளிப்பு


| சென்னை / புதுக்கோட்டை | 17.11.2022 | varalaruu.com | பக்கம்:4 | ரூ.10 |
|---|---|---|---|---|

புதுகை
வரலாறு
நாளிதழ்

17.11.2022 வியாழன்

# வரலாற்றில் இன்று



## இன்றைய பிறந்த நாள்

சி. இலக்குவனார் , தமிழகத் தமிழறிஞர் (பி.1909) (இ.1973)



ஜெமினி கணேசன் , தமிழ்த் திரைப்பட நடிகர், இயக்குநர் (பி.1920) (இ.2002)



யூசுஃப் பதான் , இந்தியத் துடுப்பாளர் (பி.1982)



## இன்றைய நினைவு நாள்

லாலா லஜபதி ராய் , இந்திய அரசியல்வாதி (பி.1865) (இ.1928)



பி. விருத்தாசலம் , தமிழகத் தமிழறிஞர் (பி.1940) (இ.2010)



பால் தாக்கரே , மகாராட்டிர-இந்திய அரசியல்வாதி (பி.1926) (இ.2012)



## அனைத்துலக மாணவர் நாள்

## உலக குறைப்பிரசவ தினம்